பணித்தாள் - 6

வகுப்பு: 5-ஆம் வகுப்பு | மாணவர் பெயர் :

பாடம்: தமிழ் | பாடத்தலைப்பு : மொழியை ஆள்வோம்

==========================================================================

உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை மூலம் வானத்தில் நைட்ரஜன் ஆக்ஸைடுகள் அதிகரிக்கின்றன. தொழிற்சாலைகள் மிகுந்துள்ள நாடுகளிலும், மோட்டார் போக்குவரத்து அதிகமாக உள்ள பிரதேசங்களிலும் அமில மழை அதிகமாகப் பெய்வதாகக் கண்டறிந்துள்ளனர். நிலப்பரப்பில் கால்சியம் கார்பனேட் பத்து மில்லி கிராமுக்குக் குறைவாக இருந்தால் அந்த நிலப்பரப்பில் அமில மழையின் பாதிப்பு அதிகமாக இருக்கிறது. அமிலமழை அடிக்கடி பெய்யும் இடங்களில் கடல் பகுதி மீன்களும், சின்னஞ்சிறு உயிரினங்களும் உயிரிழக்க நேரிடுகின்றன.

வினாக்கள்

1.அமில மழை எங்கு அதிகமாகப் பெய்கிறது?

2.அமில மழையின் பாதிப்பு எங்கு அதிகமாக இருக்கும்?

3.மீன்களும், சின்னஞ்சிறு உயிரினங்களும் உயிரை இழக்கக் காரணம் என்ன?

4.பொருத்துக:

| | |
|---|---|
| அ) அதிகரித்தல் | தாக்கம் |
| ஆ) பிரதேசம் | மிகுதியாதல் |
| இ) பாதிப்பு | நாடு |

LIVEWORKSHEETS